ආයතනයේ නම: **ක්‍රීඩා හා යෞවන කටයුතු අමාත්‍යාංශය**

පාර්ලිමේන්තුවේ රජයේ ගිණුම් පිළිබඳ කාරක සභාව විසින් සභාගත කරන ලද වාර්තා සම්බන්ධයෙන් ස්ථාවර නියෝග අංක119(4) යටතේ ගරු අමාත්‍යවරයාගේ නිරීක්ෂණ හා ගනු ලබන පියවර පාර්ලිමේන්තුව වෙත ඉදිරිපත් කිරීම.

நிறுவனத்தின் பெயர்: **விளையாட்டு மற்றும் இளைஞர் விவகார அமைச்சகம்**

பாராளுமன்றத்தின் அரச கணக்குக் குழுவினால் முன்மவைக்கப்பட்ட அறிக்கை தொடர்பாக நிலையியற் கட்டளை இலக்கம் 119(4) இன் கீழ் கௌரவ அமைச்சரின் அவதானிப்புக்களும் மற்றும் அது தொடர்பாக எருக்கப்டும் நடவடிக்கைகளும் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பித்தல்.

Name of the Institution: **Ministry of Sports & Youth Affairs**

Submission of observations of Hon.Minister and steps taken with regard to the reports tabled by the Committee on public Accounts in terms of standing order No: 119(4)

மாதிரிப் படிவ இலக்கம் 01

பாராளுமன்ற தொடர் இலக்கம் 183

நிறுவனத்தின் பெயர் : விளையாட்டு மற்றும் இளைஞர் விவகார அமைச்சு

| தொடர் இலக்கம் | குறைபாடுகள் மற்றும் பலவீனங்கள் | முன்னெடுக்கப்பட்ட செயற்பாடுகள் மற்றும் தற்போதைய முன்னேற்றங்கள் |
|---|---|---|
| 01 | உள்ளக கணக்காய்விற்காக ஒரு மாதத்திற்குள் பதில் சமர்பிக்கப்பட்டு இருக்கவில்லை.. | உள்ளக கணக்காய்விற்காக ஒரு மாதத்திற்குள் பதில் சமாப்பிக்குமாறு அனைத்துப் பிரிவுகளின் பொறுப்பாளர்கள் அறிவுறுத்தப்பட்டுள்ளதுடன் இது தொடர்பில் மூன்று மாதகாலத்திற்குள் நடாத்தப்பட்ட கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுக் கூட்டங்களின் போது கலந்துரையாடி விபரங்களைப் பெற்றுக் கொள்ள நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன. |
| 02 | வருடாந்த பொருள் ஆய்வின் மூலம் வெளியான மிகை, குறைபாடுகள் தொடர்பான பரிந்துரையும் ஏனைய பரிந்துரைகளும் உரிய கால எல்லைக்குள் அமுல்படுத்தப்படுத்த நடவடிக்கை இருக்கவில்லை. | 2020 வருடாந்த பொருள் ஆய்வு அறிக்கை 2021.03.30 ஆம் திகதியளவில் கணக்காய்வாளருக்கு அனுபப்பட்டுள்ளதுடன் பொருள் ஆய்வில் வெளியான மிகை, குறைபாடுகள் தொடர்பான அனைத்துப் பரிந்துரைகளும் 2021.09.28 ஆம் திகதியளவில் அமுல்படுத்தி பூர்த்தி செய்யப்பட்டன. |
| 03. | ஒரு வருடத்தினை விட மேற்பட்ட காலம் தொடக்கம் கடன் நிலுவை காணப்படமை குறிப்பிடத்தக்கது. | ஒரு வருடத்தினைவிட மேற்பட்ட காலம் தொடக்கம் காணப்படும் கடன் நிலுவை ரூபா 537,319.00 ஆக காணப்பட்டதுடன், தற்போது அதில் ரூபா 448,906.00 கடன் நிலுவை தீர்க்கப்பட்டுள்ளதுடன் எஞ்சிய கடன் நிலுவையான ரூபா 88,413.00 கடன் நிலுவை, அவ் ஓய்வு பெற்ற உத்தியோகத்தர்களிடம் மாதாந்தம் ரூபா 10,000.00 வீதம் ஓய்வுதிய சம்பளத்தில் இருந்து அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கபட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. . |
| 04. | பொது வைப்புக் கணக்கின் காலவதியான வைப்புக்கள் தொடர்பில் நி. ஒ. 571 இற்ககமைய செயற்பாடுளை மேற்கொள்ளவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு இருக்கவில்லை.. . | 02 வருடங்களைவிட மேற்பட்ட கால வதியான வைப்பு ரூபா 23,658,883.83 உம் 2020.12.31 ஆம் திகதியன்று காணப்பட்டதுடன் இன்று அவ் வைப்புக்களில் ரூபா 9,154,806.26 விடுவிக்கப்பட்டுள்ளது. எஞ்சிய காலவதியான வைப்புக்கள் தொடர்பில் நிதி ஒழுங்குக் கோவைக்கு அமைய செயற்படுவதற்கு உரிய உத்தியோகத்தர்களை அறிவுறுத்தி உரியவாறு எதிர்கால செயற்பாடுகள் மேற்கொள்ளப்படுகின்றன. |

| | | |
|---|---|---|
| 05. | மீளாயவிற்கு உட்படுத்தப்பட்ட ஆண்டிற்காக பாரர்ளுமன்றத்திற்கு சமர்பிக்க வேண்டிய செயற்சாதனை அறிக்கை உரிய தினத்திற்கு முன்னர் சமர்பிக்கப்பட்டு இருக்கவில்லை. | மீளாய்விற்கு உட்படுத்தப்பட்ட ஆண்டிற்காக பாராளுமன்த்திறகு சமர்பிக்க வேண்டிய செயற்சாதனை அறிக்கையினை சமர்பிப்பதற்கு 2021.06.30 ஆம் திகதி வரை காலம் நீடிக்கப்பட்டு இருந்ததுடன் காணப்பட்ட கொவிட் தொற்று நோயிற்கு மத்தியில் தேசிய கணக்காய்வு அலுவலகத்தினால் 2020 ஆம் ஆண்டில் நிதி வெளிப்பாடுகளுக்காக கணக்காய்வாளரின் அறிக்கை 2021 நெவம்பர் 22 ஆம் திகதி வழங்கப்பட்டமையினால் 2021.06.30 ஆம் திகதியன்று வருடாந்த செயற்சாதனை அறிக்கைக்கு முன்னர் பாரர்ளுமன்றத்திற்கு சமர்பிக்க முடியவில்லை.<br><br>செயற்சாதனை அறிக்கை 300 புத்தகங்களை அச்சிடும் பணிகள் அரசாங்க அச்சகத்தினால் மேற்கொள்ளப்பட்டதுடன் காணப்பட்ட கொவிட் தொற்று நோயிற்கு மத்தியில் இவ் அச்சிடும் செயற்பாடுகள் தாமதம் அடைந்தமையினால் அச்சகத்திற்கு 300 புத்தகங்கள் கிடைத்தன் பின்னர் வருடாந்த செயற்சாதனை அறிக்கை 2022.01.19 ஆம் திகதி பாராளுமன்றத்திற்கு சமர்பிக்கப்பட்டுள்ளது. (இணைப்பு 01) |
| 06 | போதுமக்கள் பட்டயம் (குயுரிமை ∴) சேவை பெறுநா் கொள்கைப் பிரகடணத்தினை உரியவாறு தயாரித்து அமுல்படுத்தல். | (குடியுரிமை ∴) சேவை பெறுநா் கொள்கைப் பிரகடணம் உரியவாறு தயாரிக்கப்பட்டுள்ளது. (இணைப்பு 02) |
| 07 | நிறுவனத்தின் (குடியுரிமை ∴) சேவைபெறுனா் கொள்கைப் பிரடணத்தை அமுல்படுத்துவது தொடர்பான மேற்பார்வை மற்றும் மதிப்பீடுகளுக்காக நிறுவனத்தினால் உரிய முறைகள் தயாரிக்கப்பட்டு இருக்கவில்லை. | பிரிவுக் கூட்டங்களின் போது மற்றும் பதவிநிலை உத்தியோகத்தா் கூட்டங்களின் போது குடியுரிமை கொள்கைப் பிரகடணம் மற்றும் சேவை பெறுனா் கொள்கைப் பிரகடணத்தினை அமுல்படுத்தும் முன்னேற்றங்கள் தொடர்பான கலந்துரையாடல் செயற்பாடுகள் மேற்கொள்ளப்படுகின்றன. |

மாதிரிப் படிவ இலக்கம் 01

பாராளுமன்ற தொடர் இலக்கம் : 183
நிறுவனத்தின் பெயர் : விளையாட்டு அபிவிருத்தித் திணைக்களம்

முதலாவது பகுதி : **90.00**

| தொடர் இலக்கம் | குறைபாடுகள் மற்றும் பலவீனங்கள் | முன்னெடுக்கப்பட்ட செயற்பாடுகள் மற்றும் தற்போதைய முன்னேற்றங்கள் |
|---|---|---|
| 1 | நி. ஒ 91(1) இற்கமைய செலவின விடயம் கருத்திற்கொள்ளப்பட்டு இருந்த ஒதுக்கீடுகள் பயன்படுத்த வேண்டிய எஞ்சிய ஒதுக்கீட்டு எல்லை அங்கீகரிக்கப்பட்ட எல்லையினைத் தாண்டி பிணைப்புக்கள் ஏற்படுத்தப்பட்டு இருந்தன. | தெற்காசிய விளையாட்டு விழாவிற்காக மதிப்பீடு செய்யப்பட்ட நிதி ரூபா 344 மில்லியனாக காணப்பட்ட போதிலும் திறைசேரியினால் ரூபா 250 மில்லியன் மாத்திரம் ஒதுக்கப்பட்டு இருந்தது. இது போதியளவு அமையாமையினால் தேசிய ஒலிம்பிக் குழுவிற்கு திறைசேரியினால் வழங்குவதாக இணங்கியிருந்த ரூபா 100 மில்லியன் கிடைக்காமையினால் இக் கால எல்லை தாண்டியுள்ளது. இது சர்வதேச போட்டித் தொடர் என்பதனால் விளையாட்டுக் குழுவினை பங்கேற்கச் செய்வது அத்தியவசிய செயற்பாடு என்பதனால் இச் செலவின எல்லையினை தாண்ட வேண்டி ஏற்பட்டுள்ளது.<br><br>எதிர்வரும காலங்களில் இணைப்புக்களை எட்டும் போது நிதி ஒழுங்குக் கோவை மற்றும் சுற்றறிக்கைக்கு அமைய செயற்பாடுகளை மேற்கொள்வற்கு குறித்துக் கொள்ளப்பட்டது. |
| 2 | ஒரு வருடத்தினைவிட மேற்பட்ட காலம் தொடக்கம் கடன் நிலுவை காணப்படுகின்றது. | • இக் கடன்படுனர் இறக்கும் போது இவ் உத்தியோகத்தரின் சேவைக்காலம் 05 வருடங்களைவிடக் குறைந்தமையினால் பணிக்கொடையினை அறவிடுவதற்கு முடியாது இருப்பதுடன் சுயவிபரக் கோவை ஆவணத்தினை கண்டுபிடிக்க முடியாது இருப்பதனால் பிணையாளர்கள் தொடர்பான தகவல்களை கண்டுபிடிக்க முடியாது இருக்கின்றது. இதனால் கடனை அறவிடுவதற்கு முடியர்து இருக்கின்றது.<br><br>எனவே நி.ஒ. 104,105 இற்கமைய காணாமல் போதல் ∴ இழப்பீடு தொடர்பில் பரிசோதனையினை மேற்கொள்வதற்காக எதிர்கால செயற்பாடுகள் மேற்கொள்ளப்படுகின்றன.<br><br>• சேவையினை கைவிட்டு சென்ற இவ் உத்தியோகத்தருக்கு உரியதாக கடன் நிதியை கெலுத்துமாறு அவரின் மனைவி சேவையாற்றும் பிரதேச செயலக அலுவலகத்திற்கு பிரதேச செயலாளரினால் அறிவிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்ட போதிலும் உரிய கடன் நிதியினை அவ் உத்தியோகத்தரின் சம்பளத்தில் இருந்து அறவிட்டு அனுப்புவதற்கு முடியாது இருப்பதாக பிரதேச செயலாளர் எழுத்து மூலம் அறிவித்துள்ளார். மேலும் இவ் |

| | | |
|---|---|---|
| | | உத்தியோகத்தரின் கடன் கோவை இன்மையினால் பிணையாளரின் தகவல்களை கண்டுபிடிக்க முடியவில்லை.<br><br>எனவே நி.ஒ. 104, 105 இற்கமைய இழப்பீடு தொடர்பில் பரிசோதனையினை மேற்கொள்வதற்காக எதிர்கால செயற்பாடுகள் மேற்கொள்ளப்படுகின்றன. |
| 3 | பொது வைப்புக் கணக்கில் காலதியான வைப்புக்கள் தொடர்பில் நி. ஒ. 571 இற்கமைய செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு இருக்கவில்லை | 2021.12.31 ஆம் திகியன்று விடுவிப்பதற்கு காணப்பட்ட வைப்பு 34 இற்காக உரிய வைப்புக்களின் நிலுவையான ரூபா 13,436,191.71 ஆகும். (இணைப்பு 03)<br><br>இவ் வைப்பு நிர்மாணிப்புக்களுக்கு உரியதாக தேக்கிவைக்கப்பட்ட நிதி என்பதுடன் அந் நிதி பொறியியல் பரிந்ரைக்கு அமைய எதிர்வரும் காலங்களில் செலுத்த வேண்டி ஏற்படுவதனால் அரசாங்கத்தின் வருமானத்தில் வைப்பிலிடப்படவில்லை. இது எவ்வாறா இருப்பினும் மீள செலுத்தாதுள்ள வைப்பு நி .ஒ. 570 இற்கமைய செயற்பாடுகளை மேற்கொள்வதற்கு குறிப்பிடப்பட்டது. |
| 4 | நி. ஒ. 571 இற்கமைய வெளியிடப்பட்ட சமயோசன இடைக்கால கட்டுநிதி பணிகள் நிறைவடைந்து ஒரு மாத்திற்குள் தீர்க்கப்பட்டு இருக்கவில்லை. | நிதி ஒழுங்குக் கோவை 371 இற்கமைய செயற்படுமாறு உத்தியோகத்தர் அறிவுறுத்தப்பட்டுள்ளதுடன் ஏற்கனவே இவ்வாறான தாமதங்கள் ஏறபடவில்லை. |

இரண்டாவது பகுதி **:68.00**

| | | |
|---|---|---|
| 5 | (குடியுரிமை ∴) சேவை பெறுனர் கொள்கைப் பிரகடணத்தை உரியவாறு தயாரித்து அமுல்படுத்தப்பட்டு இருக்கவில்லை. | (குடியுரிமை ∴) சேவைபெறுநர் கொள்கைப் பிரகடணம் 2022.03.28 ஆம் திகதி அங்கீகரிக்கப்பட்டுள்ளதுடன், அன்றை தினம் தொடக்கம் அமுல்படுத்தப்பட்டுள்ளது. |
| 6 | முழுமையான பணியாளர் சபைக்கு உள்ளடக்கபட்டுள்ள செயற்சாதனை உடன்படிக்கையைத் தயாரித்து கணக்கில் பதியப்பட்டு இருக்கவில்லை. | மொத்த பணியாளர் சபைக்கு உள்ளடக்கப்பட்டவாறு 2023 ஆண்டில் செயற்சாதனை உடன்படிக்கை தயாரிக்கப்பட்டுள்ளது. |

ஒப்பம் 08.05.2023

……………………………………………………… ………………………………..

ரொஷான் ரணசிங்க (பா.உ) தேதி

விளையாட்டு மற்றும் இளைஞர் விவகார அமைச்சர்